**செ.வெ.எண்: 638** **நாள்: 14.10.2024**

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

பதிவு செய்யப்படாத மகளிர் விடுதிகளுக்கான விழிப்புணர்வு. புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் அனைத்து தனியார் பணிபுரியும் மகளிர் விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஆகியவை தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 2014 மற்றும் விதிகள் 2015 ன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாத விடுதிகள் பதிவு செய்வதற்கு http://tnswp.com இணையதள போர்டல் மூலமாக பதிவு செய்யலாம்.

இப்பதிவு மேற்கொள்ள அறக்கட்டளை பதிவு பத்திரம், FORM D– License சொந்த கட்டடம்/ வாடகை ஒப்பந்த பத்திரம், கட்டிட வரைபடம், கட்டிட உறுதிச் சான்று, தீயணைப்புத் துறையின் தடையில்லா சான்று, காவல் துறையின் சரிபார்ப்பு சான்று (Warden & Security). FSSAI உணவு சான்றிதழ், IT & Audit Statement மற்றும் சுகாதாரதுறைத் சான்று ஆகிய சான்றுகளுடன் http://tnswp.com இணையதள போர்டல் மூலமாக வருகிற நவம்பர் 25 –ம் தேதி மாலை 5 மணிக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும். இப்பதிவு குறித்து சந்தேகங்களுக்கு மாவட்ட சமூகநல அலுவலரை 9150057533 என்ற எண்ணின் மூலம் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு முறையாக பதிவு செய்யப்படாத தனியார் விடுதி மற்றும் இணை நிர்வாகிகள் மீது சட்டப்படி காவல் துறை மூலமாக வழக்கு பதிவு செய்து அதிகபட்சமாக 2 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) அபராதம் விதிக்கப்படும் என்ற விவரம் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் அனைத்து பதிவு செய்யப்படாத மகளிர் விடுதிகளுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai